ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2309/29 - 2022 දෙසැම්බර් මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.08

2309/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: DEV/LND/02/ACQUI/02/109.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறைப் பிரதேச செயலகப் பிரிவின் கந்தறை மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கந்தரை கிராமத்தில் அமைந்துள்ளதும் ஆரம்பப் பட இலக்கம் மாற/2899 இல் துண்டு இலக்கங்கள் 01 என காட்டப்பட்டுள்ள காணியின் பகுதி (விஸ்தீரணம் 0.0378 ஹெக்டாயர்) ஆகும். காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹோம்பல பிட்டனியவத்த அல்லது ஜாகேவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கையும் இரண்டு நிரந்தரக் கட்டிடங்களையும் கொண்டது; விஸ்தீரணம்: 0.0378 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெவுந்தறைப் பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. பீ. லியனபட்டபெதி,
பிரதேச செயலாளர் (வே.பா.),
காணி கொள்வனவு அலுவலர்,
தெவுந்தறை.

பிரதேச செயலகம்,
தெவுந்தறை.
2022, திசெம்பர் 02.

EOG 12 - 0105



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*